தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

வியாழக்கிழமை, 1981 ஜனவரி 29.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''எண்ணியார் எண்ணம் இழப்பர்; இடனறிந்து
துன்னியார் துன்னிச் செயின்''

தாம் செய்து முடிக்க எண்ணிய செயலைச் செய்வதற்குத் தகுந்த இடத்தை முதலில் அறிந்து கொள்ளவேண்டும். பிறகு, தமக்கு நெருக்கமான அன்பர்களை ஆதரவாகக் கொண்டு அச்செயலைச் செய்து முடிக்கலாம். இவ்வாறு செயல்படுவோரை, 'எளிதில் வென்றுவிடலாம்' என்று எண்ணி இருந்த பகைவர்கள், தங்களுடைய இந்த எண்ணத்தை மாற்றிக் கொள்ளுவர்.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

நாகப்பட்டினம் மீன்பிடித் துறைமுகம்.

*வினா எண். 81—திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) நாகப்பட்டினத்தில் மீன்பிடித் துறைமுகம் செயல்படாமல் இருப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதனை இயங்க செய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(ஆ) மதுவையாற்றின் முகத்துவாரத்தில் அமைந்துள்ள இச்சிறு துறைமுகத்தில் மணல் தூர்ந்துள்ளதால், மணலை வாரி துறைமுகத்தை இயங்கச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

128/361—1